ஏற்கனவே, வறுமைக் கோட்டின் கீழே இருக்கும் மிகவும் வருமானம் குறைந்த அந்தப் பகுதி மக்களுக்குப் பிரத்தியேகமாக கவனம் செலுத்தி அவர்களது குடிசைகளுக்கு மின் விளக்குப் போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தை நாம் இப்போது அமல்படுத்தியிருக்கிறோம். அந்தக் குடியிருப்புகளிலிருந்து அதற்கான மனுக்கள் வந்திருக்கின்றனவா என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் மனுக்கள் அனுப்புவார்களானால் உரிய நியதிப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-10)

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு முன்னாலே நான் என்னுடைய கேள்வியை அனுப்புகிற நேரத்திலே அந்தச் சாலைகளில் விளக்குகள் சரிவர எரியவில்லை, பல்புகள் தான் இருந்தன, அவைகளின் வெளிச்சம் மிகக் குறைவாக இருப்பதால் அவைகளை மாற்றி குழாய் விளக்குகள் பொருத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு, ஒரு விளக்குத் திட்டம் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு அறிவித்தபடி அரசு கட்டித் தருகின்ற வீடுகள் ஓட்டு வீடுகளாக மாறும் பொழுது குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டம் என்பதை வீட்டுக்கு ஒரு விளக்கு என்று அறிவிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்விபோடவும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : விளவங்கோடு, கல்குளம், ஆகிய பகுதிகளிலே மின்சாரம் வருகிறபோது விளக்குகளிலே வெளிச்சம் கம்மியாக இருக்கிறது என்ற காரணத்தினால் குழித்துறையில் ஒரு சப்-ஸ்டேஷன் அமைக்கப்பட வேண்டுமென்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கன்னியாகுமரி மாவட்டத்திலே பொதுவாக மின்சக்தி குறைவழுத்த நிலைமையில் இருப்பதால் கேரளா மாநிலத்திலிருந்து நாம் மின் சக்தியைப் பெறுகிறோம், அதன் மூலம் லோ வோல்டேஜ் பிராப்ளம் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 4]

திரு. செ. இராமலிங்கம் : இதற்கு முன்பு வீடு இல்லாத அரிசன மக்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை அந்த கான்கிரீட் வீடுகளுக்கும் விஸ்தரிப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச, இராமச்சந்திரன் : அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் முன்பே கேட்டார்கள். இது குடிசைக்கு ஒரு விளக்கு. அவர்களே சொன்னார்கள் கான்கிரீட் வீடுகள் என்று. அவர்களுக்காவது கான்கிரீட் வீடு, குடிசை வீடுகளிலே உள்ளவர்களுக்கு ஒரு விளக்காவது தருகின்ற முறையிலே தான் இந்த குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் கொண்டு வரப்படுகிறது.

அம்பாசமுத்திரம் தொகுதியில் நீர்மின் திட்டங்கள்

*வினா எண். 162—திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் மணிமுத்தாறு நீர் மின் திட்டம் ஒன்று நிறுவ அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காகும் செலவு என்ன? இதை ஆரம்பிப்பதற்கான ஆய்வுகள் எந்த நிலையில் முடிவடைந்திருக்கின்றன என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டத்திற்காகும் எஸ்டிமேடட் காஸ்ட் 34 கோடி ரூபாய். ஆனால் இந்தத் திட்டத்திலே என்ன பிரச்சினை என்றால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற